1974 மார்ச் 28]

வளம் நன்ருக இருக்கிறது என்று கூறக்கூடும். அந்த அளவுக்கு அங்கே தண்ணீர் கிடைக்கும் என்று நமது வேளாண்மை விஞ்ஞானிகள் பரிசோதித்துச் சொல்வார்களேயானுல் அங்கு விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

**சங்கையில் கால்நடை வளர்ப்புத் துணை நிலையம்.**

* 657 வினு—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சங்கையில், கால்நடை வளர்ப்புத் துணை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இல்லை.

*Polutry Extension Centre, kappalur.*

* 658 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the expansion of Poultry Extension Centre near the chick hatchery at Kappalur in Madurai district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், நாம் இந்த பவுல்ட்ரி டெவலப்மென்ட்டுக்கு அதிகமாக பணம் ஒதுக்கியும், நமக்குத் தேவைப்படும் முட்டைகளில் 40 சதவிகிதம் கேரளத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இதை மாற்றி நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு முட்டை ஏற்றுமதி செய்யத்தக்க அளவுக்கு திட்டம் போடப்படுமா?

அதோடு 'டிரெஸ்டு சிக்கன்', 'ஃப்ரோசன் சிக்கன்' தயாரிப்பது பற்றியும் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கும் இந்தவகை சிக்கன்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

---

@ 863-865-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.